கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 458/2023**
திரு. தீபக் (P.W.–2) **23.7.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ படித்து உள்ளேன்.2ம் பிரதிவாதி செந்தில்குமார் நில வியாபாரம் செய்து வந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. அவர்கள் நில வியாபாரம் செய்து வந்த விவரம் எனக்கு தெரியும். வழக்கிற்காக தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், இரண்டாம் பிரதிவாதிக்கும் இடையே என்ன உறவு என்றால் அவருடைய கட்டிடத்தில் நான் வாடகைக்கு உள்ளேன். உறவு எதுவும் இல்லை. இரண்டாம் பிரதிவாதி எனக்கு மாமா உறவு வழக்கிற்காக அதை மறைக்கிறேன் என்றால் தவறு. இரண்டாம் பிரதிவாதி சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் தவறு. வாதி சொல்லி வந்துள்ளேன். தவறான சாட்சியம் அளிக்கிறேன் இரண்டாம் பிரதிவாதி சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை எத்தனை ஆண்டுகளாக எனக்குத் தெரியும் என்றால் இரண்டு வருடங்களாக தெரியும்.

2. முதல் பிரதிவாதியை நன்கு தெரியும் என்று முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன். முதல் பிரதிவாதி பற்றி என்ன தெரியும் என்றால் ஏற்கனவே என்னுடைய கடைக்கு அவர் வந்து சென்றுள்ளார். கடைக்கு வந்த பிறகுதான் அவர் குமரேசன் என்பதை தெரிந்து கொண்டேன். குருஜி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. சிலம்பு கற்றுக் கொடுக்கும்

ஆசிரியரைப் பற்றி தெரியுமா என்றால் தெரியும். ஆனால் அவர் பெயர் தெரியாது. 1ம் பிரதிவாதி தான் அவர்கள் ஊரில் குருஜி என்றும் சிலம்பு கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் என்றும் சொல்லுவார்கள் என்றால் எனக்கு தெரியாது. பற்றி எனக்கு முதல் பிரதிவாதியை பற்றி எனக்கு தெரியவில்லை அவரைப் பற்றி தெரியாமலே பொய் சாட்சி மளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒண்ணாம் பிரதிவாதிக்கு என்னை யார் என்று தெரியாது. அவர் என்னை பார்த்ததே இல்லை என்றால் தவறு. அவர் என்னை பார்த்துள்ளார் அவரிடம் பேசி உள்ளேன் என்றால் இல்லை. இதுவரை பேசி உள்ளீர்களா என்றால் இல்லை. கடைக்கு வந்தபோது பார்த்துள்ளேன்.

3. சீட்டு நடத்துவதற்காக பாதுகாப்பிற்கு பொது அதிகார ஆவணத்தை 2 ம் பிரதிவாதி ஏற்படுத்திக் கொடுத்தார் என்றால் தெரியாது. 22.5.2023 ம் தேதியில் ரூ.4,97,000/- விலை பேசி ஒப்புக்கொண்டு அன்றைய தினமே முன்பணமாக ஒரு லட்சம் இரண்டாம் பிரதிவாதி பெற்றுக் கொண்டார் என்றால் தவறு. ஒன்றாம் பிரதிவாதி பெற்றுக் கொண்டார். ஒண்ணாம் பிரதிவாதி முன் தொகை எதுவும் பெற்றுக் கொள்ளவில்லை. இரண்டாம் பிரதிவாதி தான் பெற்றுக் கொண்டார் என்றால் தவறு. குமரேசன் தான் பெற்றுக்கொண்டார். ஒண்ணாம் பிரதிவாதியை பொருத்து நான் முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. இரண்டாம் பிரதிவாதி சீட்டு நடத்தி வந்து 1ம் பிரதிவாதி அதில் உறுப்பினராக இருந்து பணம் போட்டு வரவு செலவு வைத்திருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சீட்டு கணக்கு விவரங்களை 1ம் பிரதிவாதி தீர்த்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 14.10.2009 ம் தேதி பொது அதிகார ஆவணம் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எப்படி தெரியும் என்றால் என்னுடன் கையொப்பம் செய்த

பழனிச்சாமி உடன் பேசிக் கொண்டிருந்தேன் அவர் சொன்னார். பொது அதிகார ஆவணத்தை பார்த்து உள்ளீர்களா என்றால் இல்லை. பொது அதிகார ஆவணத்தை நான் பார்த்ததில்லை. பழனிச்சாமியையும் நான் அதைப்பற்றி கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. தற்சமயம் பொய்யாக பழனிசாமி மூலம் பொது அதிகார ஆவணம் விவரங்களை தெரிந்து கொண்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

5. 3.11.2009 ல் தேதியில் 2ம் பிரதிவாதி அவருடைய தகப்பனார் பெயரில் ஏற்படுத்திய மோசடியான கிரைய ஒப்பந்த பத்திரத்தை 1ம் பிரதிவாதி ரத்து செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மோசடி கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட போது 1ம் பிரதிவாதி எந்த ஒரு தொகையும் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் தவறு. குமரேசன் வாங்கிக் கொண்டார். அவ்வாறு தொகை பெற்றுக் கொள்ளவில்லை பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. 22.5.2023 தேதி குமரேசன் லைஃப் சர்டிபிகேட் கொடுத்த சமயத்தில் கிரைய ஒப்பந்தம் ரத்து பத்திரம் ஏற்படுத்தும் போது மோசடியான கிரைய ஒப்பந்த பத்திரத்தை ஏற்படுத்தி கொண்டார்கள் என்றால் சரியல்ல. வாதிக்காகவும், இரண்டாம் பிரதிவாதிகாவும் தீய எண்ணத்தில் அவர்கள் லாபம் அடைய வேண்டி பொய்யான கையொப்பங்களை ஏற்படுத்தி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. எனக்கும் இன்னொரு சாட்சி கையொப்பம் செய்த பழனிச்சாமிக்கும் என்ன உறவு என்றால் அவரை அங்கு தான் எனக்கு தெரியும்.

6. முதல் விசாரணையில் நான் கொடுத்துள்ள என்னுடைய முகவரி இரண்டாம் பிரதிவாதியின் வீடு என்றால் தவறு. ரத்தினசாமி வீட்டில் தான் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் தவறு. என்ன கடை வைத்துள்ளேன் என்றால் பேன்சி ஸ்டோர் வைத்துள்ளேன். எத்தனை வருடங்கள் ஆக

வைத்துள்ளேன் என்றால் எட்டு வருடமாக வைத்துள்ளேன். இரண்டாம் பிரதிவாதியின் சொத்தில் கடை வாடகைக்கு உள்ளதால் இரண்டாம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் இரத்தினசாமியின் முகவரி திருப்பூர் வட்டம், பூலுவாம்பட்டி அஞ்சல், நெப்பேரிச்சல் கிராமம், தோட்டப்பாளையம் கதவு எண். 1/523 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. எட்டு வருடமாக நான் இரண்டாம் பிரதிவாதியின் சொத்தில் கடை வைத்துள்ளேன். அதனால் அவருக்கு ஆதரவாக இரண்டு வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட பொய்யான ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.07.23 18:46:28 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.